Registered with the Registrar of News Paper
For India under R.N.I. 11967/'67

வருட சந்தா ரூ.1/-

வருகையின் தூதன்

பரிசுத்த வேதாகமம்

God is faithful for the past seventy years.

Vol. 70 | யாக்கோபின் சந்ததியாரே, நீங்கள் எல்லாரும் அவரைக் கனம்பண்ணுங்கள். சங். 22:23 | மே 2024 | No.5

நமக்காக மரித்து மறுபடியும் எழுந்த அவருக்காக வாழுவோம்

Living for Him who died for us and rose again

Rich Carmichael

சிலுவைக்குச் சென்று தமது ஜீவனைக் கொடுத்து நாம் நமது பாவங்களிலிருந்து மன்னிப்பை அடையவும் நித்திய ஜீவனைப் பெற்றுக் கொள்ளவும் சித்தம் கொண்ட அன்பான நமது இரட்சகர் இயேசுவுக்கு எப்படி நமது முழுமையான மதிப்பை உணர்ந்து அதனை வெளிப்படுத்த முடியும்? ஒரே ஒரு விவரணம் அவரது பாடுகளைக் குறித்து ஏசா.53:3-12 வசனங்களில் பார்க்கிறோம்.

அவரது கெத்செமெனே ஜெபம் மரிப்பதற்கு முந்தின நாள் ஏறெடுக்கப்பட்டதிலிருந்து சிலுவையின் பாடுகளும் வெட்கமும் அவருக்கு எவ்வளவு வேதனையளித்தன என அறியலாம். "...முழங்காற்படியிட்டு, பிதாவே, உமக்கு சித்தமானால் இந்தப் பாத்திரம் என்னை விட்டு நீங்கும்படி செய்யும், ஆயினும் என்னுடைய சித்தத்தின் படியல்ல உம்முடைய சித்தத்தின் படியே ஆகக்கடவது, என்று ஜெபம் பண்ணினார். அப்பொழுது வானத்திலிருந்து ஒரு தூதன் தோன்றி அவரை பலப்படுத்தினான். அவர் மிகவும் வியாகுலப்பட்டு அதிக ஊக்கத்தோடே ஜெபம் பண்ணினார். அவருடைய வேர்வை இரத்தத்தின் பெருந்துளிகளாய் தரையிலே விழுந்தது". (லூக்.22:41-44)

அவர் இவ்வுலகில் வந்தது தமது பிதாவின் சித்தத்தை நிறைவேற்ற என்று எபி.10:5-10 வசனங்களில் படிக்கிறோம். கிரயம் எவ்வளவு அதிகம் ஆனாலும் அதை செலுத்தி தமது பிதாவின் சித்தத்தை முற்றிலும் நிறைவேற்றினார். அதற்காக "அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரண பரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத் தாமே தாழ்த்தினார்". (பிலி.2:8) "அவமானத்தை எண்ணாமல், சிலுவையை சகித்து..."எபி.12:2) தேவகுமாரனாகிய அவர் எல்லாவற்றிலும் பூரணரும் பரிசுத்தருமானவர். நமது பாவங்களுக்காக சிலுவையில் ஆணிகளால் கடாவப்பட்டது போன்ற மிகப் பெரிய தியாகம் எங்குமே காண முடியாது. அவருடைய இரத்தத்தினால் நமக்கு மீட்பும் பாவ மன்னிப்பும் கிடைத்தன. (கொலோ.1:14)

அனேகர் இரட்சிக்கப்பட்டு, சுத்திகரிக்கப்பட்டு ஆவியினால் நிறைந்திருக்கிறோம் என்று சொன்னாலும் ஒரு சிலரே நாங்கள் சிலுவையிலறையப்பட்ட வாழ்வு வாழ்கிறோம் என்று சொல்ல முடியும்.

எழுப்பப்பட்டு என்றென்றும் ஜீவிக்கிறார்

அதே வேளையில் நமது கர்த்தராகிய இரட்சகர் கல்லறையில் இல்லை என்பதை அறிவிப்பது எத்தனை மகிழ்ச்சி! "எல்லாத் துரைத்தனத்துக்கும், அதிகாரத்துக்கும், வல்லமைக்கும், கர்த்தத்துவத்துக்கும், இம்மையில் மாத்திரமல்ல, மறுமையிலும் பேர் பெற்றிருக்கும் எல்லா நாமத்துக்கும் மேலாய் அவர் உயர்ந்திருக்கத்தக்கதாக, அவரை உன்னதங்களில் தமது வலது பாரிசத்தில் உட்காரும்படி செய்து எல்லாவற்றையும் அவருடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தி" (எபேசி.1:20,21) இயேசு தாமே தம்மைக் குறித்து, "மரித்தேன் ஆனாலும், இதோ சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறேன், ஆமென்; நான் மரணத்திற்கும் பாதாளத்திற்குமுரிய திறவுகோல்களை உடையவராயிருக்கிறேன்". (வெளி.1:18) மேலும் மரித்து உயிர்த்த இயேசு திரும்ப வரப்போகிறார் என்பது ஆசீர்வாதமான நம்பிக்கை. "ஏனெனில் கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கி வருவார், அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள். பின்பு உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டு போக மேகங்கள் மேல் அவர்களோடே கூட ஆகாயத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டு, இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனே கூட இருப்போம்". (1 தெச.4:16,17)

கிறிஸ்துவுக்காக வாழுவோம்

வரும் நாளுக்காக மட்டுமல்ல இப்போது கூட தேவ மகிமைக்காக முற்றிலுமாக வாழ முடியும். ஏனெனில் கிறிஸ்துவின் மரணமும் ஜீவனும் வல்லமையாக நம்மில் கிரியை செய்கின்றன. "...நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ளும்படிக்கு அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனே கூட அடக்கம் பண்ணப்பட்டோம்". (ரோம.6:4) நாம் கிறிஸ்துவுடன் இணைந்திருப்பதால் "பாவத்திற்கு செத்து தேவனுக்கு நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவுக்குள் பிழைத்திருப்பது" (6:11) எவ்வளவு உற்சாகமளிக்கிறது. பிதா கிறிஸ்துவை எழுப்பி, உயர்த்தின அதே மகத்துவ வல்லமை நம்மில் கிரியை செய்கிறது. (எபே.1:19,20)

இவையெல்லாம் நாம் நம்மை தேவனுடைய சித்தத்திற்கு முழுமையாக அர்ப்பணிக்கும் போது நடைபெறும். இயேசு சொன்னது போல "...ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால், அவன் தன்னைத் தான் வெறுத்து தன் சிலுவையை எடுத்துக் கொண்டு என்னைப் பின்பற்றக் கடவன். தன் ஜீவனை இரட்சிக்க விரும்புகிறவன் அதை இழந்து போவான். என்னிமித்தம் தன் ஜீவனை இழந்து போகிறவன் அதைக் கண்டடைவான்". மத்.16:24,25 கிறிஸ்தவ வாழ்வில் காணப்படும் ஒரு எதிர்மறையான சத்தியம் இது. நாம் நமது சுயத்தை வெறுப்பதாலும் நமது ஜீவனைக் கொடுப்பதாலும் தேவனுடைய ஜீவனைப் பெற்றுக் கொள்கிறோம். நமக்குப் பரிபூரண ஜீவன் உண்டாக கிறிஸ்து வந்தார். (யோவா.10:10) அந்த ஜீவன் அவருக்குள் இருக்கிறது. நம்மில் அல்ல.

இம்மாத தூதனுடைய முக்கிய நோக்கம் **நம்மை வெறுத்து கிறிஸ்துவின் மரணத்தாலும் ஜீவனாலும் அவரது வல்லமையை நம் வாழ்வில் பெறுவதாகும்.** இதைவிட மிகப் பெரிய நோக்கம் நமது உறவை கர்த்தரோடு இன்னும் ஆழமாக்கி அவரது மகிமைக்காக வாழுவதாகும். ஏனெனில் கிறிஸ்து எல்லாருக்காகவும் மரித்தார். அவர்கள் தங்களுக்காக வாழாமல் தங்களுக்காக மரித்து உயிர்த்தவருக்காக வாழ வேண்டும். (2கொரி.5:15) நாம் நமக்குரிய யாவற்றையும் நமக்காக அன்பினால் தம்மையே கொடுத்தவரும் சீக்கிரத்தில் வரப்போகிறவருமான கிறிஸ்துவுக்கு அர்ப்பணிப்போமா?

வாசகர் கவனத்திற்கு

வங்கி வழியாக காணிக்கை அனுப்புகிற வாசகர்கள் தகவல் தராவிட்டால், வாசகர் பெயர் எங்களுக்கு தெரியாதபடியால், ரசீது அனுப்ப இயலாது, பத்திரிக்கையும் அனுப்ப இயலாது.

உடனே எங்களுக்கு SMS or Whatsapp அனுப்புங்கள்

Mobile : **95432 21008**

Whatsapp : **9489740295**

e-mail:varukayinthoothan@hotmail.com

வருகையின் தூதன்

ஆசிரியர்:
வெஸ்லி தேவதாசன்
(Former Editor : S.Devadason 1955 - 1999)

Advisory Board : D. StanlyJones, S. Thomas Ganesh, Christy Samuel, Christinal P.Mony

"ஸ்திரீயானவள் தன் கர்ப்பத்தின் பிள்ளைக்கு இரங்காமல், தன் பாலகனை மறப்பாளோ? அவர்கள் மறந்தாலும் நான் உன்னை மறப்பதில்லை" ஏசாயா 49:15.

ஆசிரியர் கடிதம்

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே,

பிதாவாகிய தேவனாலும், நம்முடைய இரட்சகராயிருக்கிற கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் கிருபையும் இரக்கமும் சமாதானமும் உண்டாவதாக.

2024 மேமாத தூதனுக்காக என் தேவனை நன்றியோடும், 'வெகு மனத்தாழ்மையுடனும், கண்ணீரோடும்' துதிக்கிறேன். ஆண்டவருக்குச் சித்தமானால் மேய் மாதம் முதல் 5 மாதங்கள் ஒரே தலைப்பில், வெவ்வேறு செய்திகள் எழுதுவேன். அதனைத் தொடர்ந்து கீழே அச்சிடப்பட்டுள்ள தலைப்புகளில் தலையங்கம் எழுதுவேன்.

அக்டோபர்: தாம் பூமியிலே மனுஷனை உண்டாக்கினதற்காகக் கர்த்தர் மனஸ்தாபப்பட்டார்; அது அவர் இருதயத்துக்கு விசனமாயிருந்தது ஆதி.6:6.

நவம்பர்: அவள் இயேசுவின் பாதத்தருகே உட்கார்ந்து, அவருடைய வசனத்தைக் கேட்டுக் கொண்டிருந்தாள் லூக்.10:39.

டிசம்பர்: தூங்கு தூங்கு பாலா நீ (கிறிஸ்மஸ் பாடல்)

ஜனவரி 2025: நான் இன்று முதல் உங்களை ஆசீர்வதிப்பேன் ஆகாய் 2:19.

ஒ------ஒ

நான் தேசத்தை அழிக்காதபடிக்குத் திறப்பிலே நிற்கவும், சுவரை அடைக்கவுந்தக்கதாக ஒரு மனுஷனைத் தேடினேன், ஒருவனையும் காணேன் எசேக்.22:30.

பாடுதல், ஆராதனை நடத்துதல், பிரசங்கித்தல் போன்ற அனைத்துக் காரியங்களுக்கும் போட்டி ஏராளம்; தனிமையில் மன்றாடி ஜெபிப்பதற்கோ? அதற்கு எப்பொழுதுமே தட்டுப்பாடுதான். "**ஒருவரும் இல்லையென்று கண்டு, விண்ணப்பம் பண்ணுகிறவன் இல்லையென்று ஆச்சரியப்பட்டார்**" ஏசா.59:16. கடந்த மாதம் "**மன்றாட்டு வீரர் ஆவது எப்படி?**" என்ற செய்தியில் இதை படித்திருப்பீர்கள். இம்மாதம் "**தேவன் தேடும் மனிதன்**" என்ற புத்தகத்திலிருந்து ஒரு சிறு பகுதியை கீழே அச்சிடுகிறேன்:

ஒருவனையும் காணேன்:

தேவன் எல்லா இடத்திலும் தேடி வருகிறார். அநேகரைப் பார்க்கிறார். பாட்டுப்பாட ஏராளமான பேர், பிரசங்கம் பண்ண போட்டி போட்டுக் கொண்டு பலபேர். பிரசங்கம் கேட்க திரளான கூட்டம். கூட்டங்கள் ஏற்பாடு செய்ய எண்ணற்றோர். ஊழியத்திற்குப் பணம் கொடுக்க பலபேர். சபைகளை நடத்த ஊழியர் அநேகர். சுவிசேஷக் குழுக்களை உருவாக்கி நடத்த முயலுவோர் பலர். அனைவரையும் கண்டும் ஆண்டவர் மனம் திருப்தியடையவில்லை. மீண்டும் தேசம் எங்கும் சுற்றி வருகிறார். அவர் தேடும் மனிதன் எங்கும் இல்லை. இறுதியாக உங்கள் அருகில் வந்து நிற்கிறார். சற்று உங்கள் ஆத்மீக கண்களைத் திறந்து பாருங்கள். எப்படிக் காண்கிறீர்கள்?

ஏமாற்றமடைந்த முகம், கண்களில் கண்ணீர், ஆச்சரியம் கலந்த பரிதாபமான பார்வை, வேதனையுடன் வார்த்தை வெளிவருகிறது, '**ஒருவனையுங் காணேன்**'. பெரு மூச்சுடன் மீண்டும் தொடர்கிறார், "**மனிதனுக்காக என் ஜீவனையே கொடுத்தேன். எத்தனை கோடி மக்களைப் பாவத்திலிருந்து, வேதனையிலிருந்து, துக்கத்திலிருந்து, மரணத்திலிருந்து விடுதலை செய்திருக்கிறேன். புதிய வாழ்வு அளித்திருக்கிறேன். ஆனாலும் ஒருவரும் இல்லையே! (...இதயமே உடைந்து விடுவது போல் ஒரு ஏக்கம்) விண்ணப்பம் பண்ணுகிறவன் இல்லையே!**" *(ஏசா.59:16)* ஏங்குகிறார்; கலங்கித் தவிக்கிறார்; மவுனமாக உங்களைப் பார்க்கிறார்.

2024 கர்த்தருக்கு முன்பாக உண்மையும் உத்தமுமாய் நடக்கும் ஆண்டு
I have walked before thee in truth and with a perfect heart. Isa.38:3

ஆண்டு காணிக்கை ரூபாய் 500

ஆபிரகாமோ மின்னும் கர்த்தருக்கு முன்பாக நின்று கொண்டிருந்தான். ஆதி. 18:22

1. கர்த்தரோடு நெருக்கமான உறவு:

ஆதி.18:1 தமிழ் மொழிபெயர்ப்பில் "கர்த்தர் தரிசனமானார்" என்றிருக்கிறது. ஆங்கிலத்தில் Lord appeared கர்த்தர் ஆபிரகாமுக்கு காணப்பட்டார்.

அவன் பகலின் உஷ்ண வேளையில் கூடார வாசலிலே உட்கார்ந்திருந்து,

தன் கண்களை ஏறெடுத்துப் பார்க்கும் போது, இதோ, மூன்று புருஷர் அவனுக்கு எதிரே நின்றார்கள். அவன் எதிர்கொண்டு ஓடித் தரைமட்டும் குனிந்து:

ஆண்டவரே, உம்முடைய கண்களில் எனக்குக் கிருபை கிடைத்ததானால், நீர் உமது அடியேனை விட்டுக் கடந்து போக வேண்டாம்.

கொஞ்சம் தண்ணீர் கொண்டு வரட்டும், உங்கள் கால்களைக் கழுவி, மரத்தடியில் சாய்ந்து கொண்டிருங்கள்.

நீங்கள் உங்கள் இருதயங்களைத் திடப்படுத்தக் கொஞ்சம் அப்பம் கொண்டு வருகிறேன்; அப்புறம் நீங்கள் உங்கள் வழியே போகலாம் என்றான் *ஆதி.18:1-5.*

2. கர்த்தருக்கு கொடுப்பது:

ஆபிரகாம் வெண்ணெயையும் பாலையும் சமைப்பித்த கன்றையும் எடுத்து வந்து, **அவர்கள் முன்பாக வைத்து,** அவர்கள் அருகே மரத்தடியில் நின்று கொண்டிருந்தான் *ஆதி.18:18.* இது கர்த்தருக்கு கொடுப்பதற்கு அடையாளம். நீங்கள் ஸ்தாபன சபையில் காணிக்கை பையில் போடலாம்; பிற சபைகளில் பெட்டியில் காணிக்கை போடலாம்; மிஷனெரி ஊழியங்களுக்கு காணிக்கை கொடுக்கலாம், எல்லாம் கர்த்தருக்கு கொடுப்பதாகும்.

வருகையின் தூதன் ஊழியத்திற்கு மாதந்தோறும் காணிக்கை அனுப்புகிறீர்களா? இடைக்கிடையே அனுப்புகிறீர்களா? வருடத்திற்கு ஒரு முறை சிறப்பு காணிக்கை கொடுக்கிறீர்களா? எல்லாம் கர்த்தருக்கு கொடுப்பதே!

ஆனால் கள்ள தீர்க்கதரிசிகளுக்கும், பொய் சொல்லுகிற ஊழியர்களுக்கும் காணிக்கை கொடுக்காதேயுங்கள். "கர்த்தர் பார்த்துக் கொள்வார் பிரதர்" என்பது உங்கள் சாக்கு போக்கு ஆகும். நம்முடைய எஜமானாகிய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மிகத் தெளிவாக கூறியுள்ளார்:

அநேகங் கள்ளத் தீர்க்கதரிசிகளும் எழும்பி, அநேகரை வஞ்சிப்பார்கள் மத்.24:11.

(3-ம் பக்கம் பார்க்க)

அறிவிப்புகள்

கடிதம், மணியாடர், கொரியர் அனுப்ப வேண்டிய முகவரி:

வருகையின் தூதன்
நியூபோர்ட் தெரு,
நாகர்கோவில் – 629 001.
Ph. : 95432 21008

VARUKAYIN THOOTHAN
Newport Street,
Nagercoil-629 001.
Ph. : 95432 21008

காசோலை *(Cheque & Draft)*
வெஸ்லி தேவதாசன் (WESLEY DEVADASON)
என்ற பெயர் மட்டும் எழுதி அனுப்புங்கள்

வருகையின் தூதன் பத்திரிகை பணி
A/c. Name : **WESLEY DEVADASON,** A/c. No. : **2131010118439**
Punjab National Bank, Nagercoil -1. IFSC Code : **PUNB0213120**

வருகையின் தூதன் உபவாச ஊழியம்
A/c. Name : **WESLEY DEVADASON,** A/c. No. : **370601000002557**
I.O.B., Nagercoil-1 IFSC Code : **IOBA0000063**

வருகையின் தூதன் முன்னேற்றப்பணி
A/c. Name : **WESLEY DEVADASON,** A/c. No. : **61822200136904**

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

ஏனெனில், கள்ளக் கிறிஸ்துக்களும் கள்ளத் தீர்க்கதரிசிகளும் எழும்பி, **கூடுமானால்** தெரிந்து கொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்கத்தக்கதாகப் பெரிய அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்வார்கள் மத்.24:24

கடந்த மாதம் சகோதரன் எழுதியதை ஞாபகப்படுத்துகிறேன்:

கடைகளுக்குப் போவதிலும், இனத்தார் நண்பர்களைச் சந்திப்பதிலேயுமே உங்கள் விடுமுறைக் காலங்களைக் கழித்து விடாதீர்கள். புதிய பணித்தளம் ஒன்றிற்குச் சென்று அங்குள்ள மிஷனரிகளுடன் சிலநாள் தங்கியிருங்கள். அப்பொழுதுதான் அவர்களது பிரச்சனைகளையும் தடுமாற்றங்களையும் நேரடியாய் நீங்கள் அறிந்து கொள்ள முடியும். சில ஆதிவாசியினரிடையே உட்புகுவது எவ்வளவு கடினம் என்று உணருவீர்கள். ஒரு சில வார்த்தைகளுக்குச் சமமான சொற்களை ஆதிவாசி மொழிகளில் கண்டு பிடிக்க அப்பப்பா, வேதாகம மொழி பெயர்ப்பாளர்கள் எவ்வளவாய்த் திண்டாடுகிறார்கள் என்றெல்லாம் அறிந்து கொள்ள இவர்களோடு தங்கியிருந்து பாருங்கள். அப்பொழுது தான் ஒரு நாளும் பகட்டு மேடைகளுக்கு வராத வேத மொழியாக்கிகளுக்காய்க் கருத்தாய் மன்றாடும் படி உங்கள் முழங்கால்கள் விரையும்.

இவ்விதஎண்ணத்தோடேயே இரண்டு மிஷனெரி பணிகளைப் பற்றி மிக சுருக்கமாக எழுதுகிறேன்:

(i) எனது சகோதரியின் கணவர் கன்னியாகுமரி C.S.I. அத்தியட்சாதீனத்தில், சேகரத்து போதகராயிருந்த போது (District Chairman) அவர் ஆயராயிருந்த சபைகளுக்கு அருகில் உள்ள கிராமங்களில் ஞாயிறு பள்ளி (Sunday school) ஆரம்பித்து, அதை சபையாக வளர செய்து 17 சபைகளை அத்தியட்சாதீனத்திடம் ஒப்படைத்திருக்கிறார்கள், நம்ப முடிகிறதா?

கன்னியாகுமரி மாவட்டம், மார்த்தாண்டம் சேகரத்து போதகராயிருந்த போது, கர்த்தர் அவருக்குக் கொடுத்த தரிசனத்தின்படி, குஜராத்தில் ஊழியம் ஆரம்பித்தார்கள். 12 திருச்சபைகளை ஸ்தாபித்த அவர்கள் தனது 86-வது வயதில் தேவ ராஜ்யம் சென்றடைந்தார்கள்.

ஆரம்ப நாட்களில் இருந்தே அவரோடு இணைந்து குஜராத் மிஷனெரி பணிகளை செய்து வந்த எனது சகோதரியின் வயது இப்போது 88 ஆனாலும் தலைமை தாங்கி, இன்று வரை குஜராத்தில் ஊழியம் செய்து வருகிறார்கள்.

ஒவ்வொரு புது ஆலய கட்டடத்தையும் ஒரு புது ஊழியரைக் கொண்டு திறக்கும் அவர்களுடைய வழக்கத்தின் படி, ஒருவிசை என்னை அழைத்தார்கள். நானும், மகனும் விமானம் மூலம் மும்பை சென்று, ரயில் வழியாக குஜராத் சென்றோம்.

பிரதிஷ்டைக்கு முந்தின நாள் அநேக ஆலயங்களை நாங்கள் நேரில் சென்று பார்வையிட்டோம். ஞாயிற்றுக் கிழமை போதகர்கள் தலைமையில் ஆலயத்தைத் திறந்து, கர்த்தருடைய வசனத்தை பிரசங்கித்தேன். அதற்கு பிறகும் அநேக ஆலயங்களை நாங்கள் பார்வையிட்டு, ஆலயங்களுக்கு உள்ளேயும், சில இடங்களில் வெளியிலும் நின்று ஜெபித்தோம். எனது தகப்பனார் பெயரில் கட்டப்பட்டிருந்த **S. தேவதாசன் நினைவு ஆலயம்** உள்ளே சென்று முழங்கால் படியிட்டு ஜெபித்தோம்.

(ii) இஸ்லாமிய நாட்டில் அதிக சம்பளத்தோடு வேலை செய்து கொண்டிருந்த எனது நண்பரின் மகன், ஆண்டவருடைய அழைப்பை ஏற்று இந்தியா வந்தார். நமது அலுவலக மாடியில் அவர் ஆங்கில ஆராதனை நடத்தி வந்ததை நான் ஏற்கெனவே தூதனில் எழுதியிருந்தேன்.

தன்னுடைய சபையின் சார்பில் ஒரு மிஷனெரியை தாங்குவதற்காக உத்திர பிரதேச மாநிலம் சென்றார். ரயிலில் திரும்ப வரும் போது, "**அனுப்பு மிகுதி, வேலையாட்களோ கொஞ்சம்**" என்ற வசனத்தின் மூலம் ஆண்டவர் அவரோடு பேசினார். எனவே இவர் தன்னையே மிஷனெரியாக அர்ப்பணம் செய்தார். நாகர்கோவில் பட்டணத்தில் ஒரு சபையில் வைத்து பிரதிஷ்டை செய்து அனுப்பி வைக்கப்பட்டார். இன்றைக்கு உத்திர பிரதேசத்தில் அநேக ஆலயங்களும், ஆரம்ப பள்ளி கூடமும் இருக்கிறது. எனது இளைய மகள் உத்திர பிரதேசத்திற்கு சென்று சில நாட்கள் தங்கியிருந்து திரும்பினாள்.

இதில் மிகவும் வேதனையான காரியம் என்னவென்றால், உத்திர பிரதேசத்தில் ஊழியர்கள் அடிக்கடி கைது செய்யப்படுவதாகும். உத்திர பிரதேச மாநிலத்திற்காக ஜெபிப்பீர்களா?

இந்த ஆசிரியர் கடிதத்தை எழுத ஆரம்பித்த பெப்ரவரி மாதம் 14-ம் தேதி, இந்த தேவ ஊழியர் எங்கள் வீட்டிற்கு நேரில் வந்து, பாரத்துடன் எனக்காக ஜெபித்தார்கள், ஆண்டவருக்கே மகிமை உண்டாவதாக.

3. கர்த்தர் ஆசீர்வதிக்கிறார்:

நான் அவளை ஆசீர்வதித்து, அவளாலே உனக்கு ஒரு குமாரனையும் தருவேன்; அவள் ஜாதிகளுக்குத் தாயாகவும், அவளாலே ஜாதிகளின் ராஜாக்கள் உண்டாகவும், அவளை ஆசீர்வதிப்பேன் என்றார் ஆதி.17:16.

அப்பொழுது ஆபிரகாம் முகங்குப்புற விழுந்து நகைத்து; ஆதி.17:17.

ஆகையால், சாராள் தன் உள்ளத்தில் நகைத்து; ஆதி.18:12.

ஆபிரகாம் முதிர்வயதாயிருக்கையில், சாராள் கர்ப்பவதியாகி, தேவன் குறித்திருந்த காலத்திலே அவனுக்கு ஒரு குமாரனை பெற்றாள் ஆதி.21:2.

அப்பொழுது சாராள்: தேவன் என்னை நகைக்கப் பண்ணினார்; இதைக் கேட்கிற யாவரும் என்னோடே கூட நகைப்பார்கள் என்றாள் ஆதி.21:6.

அருமையான கர்த்தருடைய பிள்ளைகளே, கர்த்தர் சொல்வதை கேளுங்கள்: அப்பொழுது கர்த்தர் ஆபிரகாமை நோக்கி: சாராள் நகைத்து, நான் கிழவியாயிருக்கப் பிள்ளை பெறுவது மெய்யோ என்று சொல்வானேன்?

"**கர்த்தரால் ஆகாத காரியம் உண்டோ?**" ஆதி.18:13,14.

4. கர்த்தர் அழிவை அறிவிக்கிறார்:

நான் செய்யப் போகிறதை ஆபிரகாமுக்கு மறைப்பேனோ?

பின்பு கர்த்தர் சோதோம் கொமோராவின் கூக்குரல் பெரிதாயிருப்பதினாலும், அவைகளின் பாவம் மிகவும் கொடிதாயிருப்பதினாலும், நான் இறங்கிப் போய், ...அறிவேன் என்றார் ஆதி.18:18,20,21.

நாங்கள் இந்த ஸ்தலத்தை அழிக்கப் போகிறோம், இவர்கள் கூக்குரல் கர்த்தருடைய சமுகத்தில் பெரிதாயிருக்கிறது; இதை அழிக்கக் கர்த்தர் எங்களை அனுப்பினார் என்றார்கள் ஆதி.19:13.

5. கர்த்தருக்கு முன்பாக நின்று கொண்டிருந்தான்:

ஆதியாகமம் 18-ம் அதிகாரத்தை இரண்டு பகுதியாக பிரிக்கலாம். முதல் பகுதியில் தேவன் ஆபிரகாமுக்கு அற்புதமான ஒரு ஆசீர்வாதத்தை வாக்களிக்கிறார்:

அப்பொழுது அவர் (கர்த்தர்): ஒரு உற்பவ காலத்திட்டத்தில் நிச்சயமாய் உன்னிடத்திற்குத் திரும்ப வருவேன்; அப்பொழுது உன் மனைவியாகிய சாராளுக்கு ஒரு குமாரன் இருப்பான் என்றார் ஆதி.18:10

கர்த்தர் ஆபிரகாமை ஆசீர்வதித்த பின்னும், **ஆபிரகாமோ பின்னும் கர்த்தருக்கு முன்பாக நின்று கொண்டிருந்தான்.** But Abraham stood yet before the **LORD** ஆதி.18:22.

அருமையான கர்த்தருடைய பிள்ளைகளே, நீங்கள் எல்லா விதங்களிலும் கர்த்தரால் ஆசீர்வதிக்கப் பட்டிருக்கிறீர்கள் அல்லவா? சோதோமின் பாவம் மிகவும் கொடிதாயிருப் பதினால் கர்த்தர் அதை அழிக்க போகிறார். இந்த செய்தியின் மூலம் கர்த்தர் அதை அறிவிக்கிறார். அழியும் சோதோமுக்காக, அழியும் பட்டணங்களுக்காக, அழியும் தேசத்திற்காக, அழியும் ஆத்துமாக்களுக்காக நீங்கள் கர்த்தருக்கு முன்பாக நிற்பீர்களா? Are You yet stood before the LORD? இந்த செய்தியின் நோக்கமே அதுதான்.

6. கர்த்தருக்கு முன்பாக தூளும் சாம்பலுமாயிருக்கிற அடியேன்:

ஆபிரகாமோ பின்னும் கர்த்தருக்கு முன்பாக நின்றுக் கொண்டிருந்தான்.

(4-ம் பக்கம் பார்க்க)

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

அப்பொழுது ஆபிரகாம் சமீபமாய் சேர்ந்து: ஐம்பது நீதிமான்கள் நிமித்தம் இரட்சியாமல் அந்த ஸ்தலத்தை (பட்டணத்தை) அழிப்பீரோ? என்றான். அதற்கு கர்த்தர்: இரட்சிப்பேன் என்றார் ஆதி.18:22-26

நாற்பத்தைந்து நீதிமான்கள், நாற்பது நீதிமான்கள், முப்பது நீதிமான்கள், இருபது நீதிமான்கள், பத்து நீதிமான்கள் என்று சொல்லி ஆபிரகாம் திரும்ப, திரும்ப மன்றாடுகிறான். ஜெப வீரனான ஆபிரகாம், **இதோ, தூளும் சாம்பலுமாயிருக்கிற அடியேன் ஆண்டவரோடே பேசத் துணிந்தேன்** (ஆதி.18:27) என்று தன்னைத் தாழ்த்துகிறான்.

ஜெப வீரரே, **என் நாமம் தரிக்கப்பட்ட என் ஜனங்கள் தங்களைத் தாழ்த்தி, ஜெபம் பண்ணி, என் முகத்தைத் தேடி, தங்கள் பொல்லாத வழிகளை விட்டுத் திரும்பினால், அப்பொழுது பரலோகத்திலிருக்கிற நான் கேட்டு, அவர்கள் பாவத்தை மன்னித்து, அவர்கள் தேசத்துக்கு ஷேமத்தைக் கொடுப்பேன்** என்கிறார் கர்த்தர். ஆங்கிலத்தில் I will heal their land என்றிருக்கிறது, அல்லேலூயா.

7. கர்த்தர் ஆபிரகாமை நினைத்தார்:

தேவன் அந்தச் சமபூமியின் பட்டணங்களை அழிக்கும் போது, **தேவன் ஆபிரகாமை நினைத்து,** ...லோத்தை அந்த அழிவின் நடுவிலிருந்து தப்பிப் போகும்படி அனுப்பி விட்டார் ஆதி.19:29.

கர்த்தர் நம்மை நினைத்திருக்கிறார், அவர் ஆசீர்வதிப்பார் சங்.115:12. ஆனால் நாம் நம்முடைய துக்கங்களில், துயரங்களில், வியாதியில், வேதனையில், கவலைகளில், கண்ணீரில் என்ன சொல்லுகிறோம்?

சீயோனே: **கர்த்தர் என்னைக் கைவிட்டார், ஆண்டவர் என்னை மறந்தார்** என்று சொல்லுகிறாள். ஆங்கிலத்தில் But zion said, The LORD hath forsaken me, and my LORD hath forgotten me.

அன்புள்ள தேவனின் கனிவான பதில்:

Can a woman forget her sucking child, that she should not have compassion on the son of her womb? Yea they may forget, yet will not forget thee. ஏசா.49:14,15

ஸ்திரீயானவள் பால் குடிக்கிற தன் பிள்ளைக்கு மனதுருகாமல், அவனை மறப்பாளோ? அவள் ஒரு வேளை மறக்கலாம், ஆனால் நான் உன்னை மறப்பதில்லை என்று கர்த்தர் சொல்லுகிறார்.

தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.
தேவ கிருபை உங்களோடிருப்பதாக.

உதவி : **94897 40295** உங்கள் அன்பு சகோதரன்
அலுவலகம் : **95432 21008** வெஸ்லி தேவதாசன்

பாடுதல், ஆராதனை நடத்துதல், பிரசங்கித்தல் போன்ற அனைத்துக் காரியங்களுக்கும் போட்டி ஏராளம்; தனிமையில் மன்றாடி ஜெபிப்பதற்கோ? அதற்கு எப்பொழுதுமே தட்டுப்பாடுதான்.

கிரீடத்துக்கு முன்னானது சிலுவை

The cross proceeds the crown

Paul E.Billheimer (1897-1984)

"அந்த வழியாய் நடந்து போகிறவர்கள் தங்கள் தலைகளை துலுக்கி, தேவாலயத்தை இடித்து மூன்று நாளைக்குள்ளே கட்டுகிறவனே உன்னை நீயே இரட்சித்துக்கொள்; நீ தேவனுடைய குமாரனானால் சிலுவையிலிருந்து இறங்கி வா என்று அவரை தூஷித்தார்கள், அப்படியே பிரதான ஆசாரியரும் வேதபாரகரும் மூப்பரும் பரியாசம் பண்ணி மற்றவர்களை இரட்சித்தான். தன்னைத்தான் இரட்சித்துக் கொள்ள திராணி இல்லை, இவன் இஸ்ரவேலின் ராஜாவானால் இப்பொழுது சிலுவையிலிருந்து இறங்கி வரட்டும் அப்பொழுது இவனை விசுவாசிப்போம்". (மத்.27:39-42)

"ஜனங்கள் நின்று பார்த்துக் கொண்டிருந்தார்கள். அவர்களுடனே கூட அதிகாரிகளும் அவரை இகழ்ந்து, இவன் மற்றவர்களை இரட்சித்தான், இவன் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட கிறிஸ்துவானால் தன்னைத் தானே இரட்சித்துக் கொள்ளட்டும் என்றார்கள்". (லூக்.23:35)

சாத்தான் கிறிஸ்துவுக்கு சிலுவை(பாடுகள்)யில்லாத வெற்றியைக் கொடுக்க முன் வந்தான்

நமது ஆண்டவருடைய வாழ்விலும் ஊழியத்திலும் சாத்தான் அவருக்கு எளிதான வழியில் மேன்மை அல்லது அதிகாரத்தை சிலுவையின்றி அளிக்க முன்வந்தான். ஆனால் இவை மறுக்கப்பட்டன.

அவருடைய ஊழியத்தின் ஆரம்ப காலத்தில் இவ்வாறு பிசாசு அவரை சோதித்தான். "பிசாசு அவரை உயர்ந்த மலையின் மேல் கொண்டு போய் உலகத்தின் சகல ராஜ்யங்களையும் ஒரு நிமிஷத்தில் அவருக்குக் காண்பித்து, இவைகள் எல்லாவற்றின் மேலுள்ள அதிகாரத்தையும் இவைகளின் மகிமையையும் உமக்குத் தருவேன். இவைகள் எனக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கிறது ...நீர் என்னைப் பணிந்து கொண்டால் எல்லாம் உம்முடையதாகும் என்று சொன்னான்". (மத்.4:8-10; லூக்.4:5-8) இது சிலுவை மரணமின்றி வெற்றியும் சிலுவை பாடுகளின்றி கிரீடமும் தரும் ஒரு சாத்தானின் தந்திரமும் சோதனையில் பாடுகளின்றி அதிகாரத்தைப் பெறுவதும் தாழ்த்தப் படாமல் உயர்த்தப்படுவதுமாகும்.

இவ்விதமான ஒரு சந்தர்ப்பம் இயேசுவுக்கு கிரேக்கரை சந்தித்த போது ஏற்பட்டது. அவர்கள் சீஷர்களில் ஒருவனிடம் 'ஐயா, இயேசுவைக் காண விரும்புகிறோம்' (யோவா.12:21) என்றனர். கிரேக்கர்கள் தங்கள் தேசத்துக்கு இயேசு சென்றால் அவர் பாதுகாவலாக ஊழியத்தைத் தொடரவும் மரண பயமுறுத்தலிலிருந்து விடுபட முடியும் என்றும் எண்ணி அழைத்திருக்கலாம். இயேசு இந்த அழைப்பினை எப்படி சந்தித்தார்? "...கோதுமை மணியானது, நிலத்தில் விழுந்து சாகாவிட்டால் தனித்திருக்கும், செத்ததேயாகில் மிகுந்த பலனைக் கொடுக்கும்". (யோவா.12:24) கிறிஸ்து இழந்து போன உலகிற்கு அவரது மரணம் முன்னால் வர வேண்டும் என்பதற்காக வழிவிலக மறுத்து விட்டார்.

மூன்றாவது முறையாக அவர் இந்த சோதனையை சந்தித்தார். அவருடைய ஊழியத்தின் முடிவு நாட்களில் ஒரு முறை எருசலேம் செல்லும் வழியிலிருக்கும் போது சீஷர்களிடம் எருசலேமில் தமக்கு சம்பவிக்கப் போகிறவைகளை எடுத்துக் கூறினார். அவரைப் பரியாசம் பண்ணி, அவர் மேல் உமிழ்ந்து, புறம் பாக்கப்பட்டு பிரதான ஆசாரியராலும் வேதபாரகராலும் சிலுவையிலறையப் படப் போவதாக விளக்கினார். மாம்ச இருதயம் கொண்ட பேதுருவுக்கு அவருடைய முழு ஊழியமும் பயனற்று முடிந்து போவதாகத் தோன்றியது. "அவன் இயேசுவைத் தனியே அழைத்துக் கொண்டு போய் அவரைக் கடிந்து கொள்ள ஆரம்பித்தான். இது உமக்கு நேரிடக் கூடாதே என்றான். இயேசுவோ அவனைத் திரும்பி பார்த்து எனக்குப் பின்னாகப் போ சாத்தானே" (மத்.16:22,23) என்று சோதனையை ஜெயித்தார்.

நமது கண்களுக்கு முன்பாக இயேசு சிலுவையில் தொங்கும் காட்சியைக் காண்கிறோம். அவரது மரணத்தைக் குறித்த தீர்க்கதரிசனங்கள் ஏறக்குறைய நிறைவேறிவிட்டன. இந்த பயங்கரமான நேரத்தில் அவர் இந்த உலகத்தில் வந்ததின் நோக்கத்தை நிறைவேற்றி முடிக்கவிருக்கும் இத்தருணத்தில் இயேசு இருக்கிறார். சிலுவையில் அறையப் படவிருக்கும் வேதனை, மரணத்தின் தாக்கம், வேதனை மிகுந்த நேரம் மறுபடியும் சோதனை வருகிறது. "நீ தேவனுடைய குமாரனானால் சிலுவையிலிருந்து இறங்கி வா". (மத்.27:40)

கிறிஸ்துவுக்கு இறங்கிவர வல்லமையுண்டு, ஆனால் அவர் அதைத் தெரிந்து கொள்ளவில்லை. "நான் இப்பொழுது என் பிதாவை வேண்டிக் கொண்டால் அவர் பன்னிரண்டு லேகியோனுக்கு அதிகமான தூதர்களை என்னிடத்தில் அனுப்பமாட்டார் என்று நினைக்கிறாயா?" (மத்.26:53,54) இதை அவர் பேதுருவிடம் தோட்டத்தில் வைத்துக் கூறினார். அவர் கீழிறங்கி வந்திருக்கலாம். சோதனை அதிகக் கூர்மையாயிருந்தது. கல்வாரியின் கசப்பான பாத்திரம் அவர் சிலுவையைத் தவிர்க்கச் செய்திருக்கலாம். இத்தகைய கொடிய நேரத்தில் "நீ தேவனுடைய குமாரனானால் சிலுவையிலிருந்து இறங்கி வா" என்ற சத்தம் தீவிரமாக எதிரொலிக்கிறது.

(5-ம் பக்கம் பார்க்க)

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

அவர் இறங்கி வருவாரா? தன்னை இரட்சிக்க இந்த சவாலுக்கு பதிலளிப் பாரா? இறுதியில் சிலுவையை மறுத்து விடுவாரா? அண்டசராசரங்களின் சிங் காசனம் ஆபத்திலிருக்கிறது. அவர் சிலுவையிலிருந்து இறங்கினால் சிங்காசனத்தை இழக்க வேண்டும். சாத்தான் இறுதியில் தோற்கடிக்கப் பட்டான். அவனது அதிகார இருக்கை யிலிருந்து தள்ளப்பட்டான். **F.J. ஹியுகல்** சொல்வது போல, "**உலகத்தின் சிங்காசனம் ஒரு சிலுவை. கிரிஸ்து சிலுவையி லிருந்து ஆட்சி செய்கிறார்**". அவர் சிலுவைக்குச் சென்றபடியால் அவர் அகிலாண்டத் திற்கும் மேலானவராயிருக்கிறார். இந்த மேன்மை ஒரு நாள் திறந்தமுகமாக வெளிப்படுத்தின விசேஷம் போதிப்பது போல வெளிப்படும்.

வரலாற்றைவிட முக்கியமான சத்தியம்

இதுவரை நாம் படித்ததெல்லாம் வரலாறு கிறிஸ்து இன்று ஆட்சி செய்வதற்கான காரணம் அவர் சிலுவை யில் தொங்கி உலகத்துக்காக தமது ஜீவனை விட்டார். சிலுவை என்பது வரலாற்றைவிட மேலான சத்தியம். பவுல் சொல்வது போல் "நாம் இனி பாவத்துக்கு ஊழியஞ் செய்யாத படிக்கு பாவச் சரீரம் ஒழிந்து போகும் பொருட்டாக, நம்முடைய பழைய மனுஷன் அவரோடே கூடச் சிலுவை யில் அறையப்பட்டதென்று அறிந் திருக்கிறோம்". *(ரோம.6:6)* "மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து, மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டது போல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர் களாய் நடந்து கொள்ளும்படிக்கு, அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவு டனே கூட அடக்கம் பண்ணப்பட் டோம். ஆதலால் அவருடைய மரணத் தின் சாயலில் நாம் இணைக்கப் பட்டவர்களானால் அவர் உயிர்த் தெழுதலின் சாயலிலும் இணைக்கப் பட்டிருப்போம்". *(ரோம.6:4-5)*

"கிறிஸ்துவுடனே கூடச் சிலுவையி லறையப்பட்டேன், ஆயினும் பிழைத் திருக்கிறேன் இனி நான் அல்ல கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக் கிறார். நான் இப்பொழுது மாம்சத்தில் பிழைத்திருக்கிறதோ, என்னில் அன்பு கூர்ந்து, எனக்காகத் தம்மைத் தாமே ஒப்புக்கொடுத்த தேவனுடைய குமார னைப் பற்றும் விசுவாசத்தினாலே பிழைத்திருக்கிறேன்". *(கலா.2:20)*

இந்த வேத வசனங்களும் பிற வசனங்களும் மிகவும் தெளிவாக எல்லா விசுவாசிகளும் கிறிஸ்துவின் மரணத்தில் பங்குள்ளவர்கள் என தெரிவிக்கின்றன. ஹியூகல் சொல்வது போல கிறிஸ்துவில் நமது மரணம் முக்கியமான ஒரு உறவாகும்.

யுத்தம் ஆரம்பிக்கிறது

மாம்சீக மனதிலிருந்து நாம் முழுவதுமாக கழுகி சுத்திகரிக்கப்பட்டு ஆவியினால் நிரப்பப்பட்டால் பழைய மனுஷன் கிறிஸ்துவோடு சிலுவையி லறையப்பட்டு ஆணியடிக்கப்பட்டு விடுகிறான். நமது சித்தம் நேர்மையாக இருந்தால் அவர் இந்த பலியை ஏற்றுக் கொள்கிறார். பின்பு போர் ஆரம்பிக் கிறது. வார்த்தையின்படி நாம் செய் தவைகள், செயல்முறையில் முடிவில் லாத விதவிதமான அனுதின வாழ்வு, கிறிஸ்தவ அனுபவம் நடத்தை போன்ற வற்றில் செய்து காண்பிக்கப்பட வேண்டும். நமது பழைய மனுஷன் உண்மையாகவும் செயல்முறையிலும் சிலுவையிலறையப்பட்டு விட்டதை நாம் ஒத்துக் கொள்ளும் போது சாத்தான் உடனே அதிக சத்தமாக நமது வாழ்வு, இயற்கை, சுயம் ஆகியவற்றைப் பற்றி பரிதாபம் கொள்ள ஆரம்பிக்கி றான். பேதுரு இயேசுவிடம் ஆண்டவரே இது உமக்கு நேரிடக் கூடாதே என்றது போல தடை போடுகிறான். நாம் மிகவும் கவனமாக இராவிடில் அவனது அனுதாபத்தை ஏற்றுக் கொண்டு சாத் தானோடு இணைந்து, மாம்சம் சாகக் கூடாது. நாம் சிலுவைக்குச் செல்ல பாத்திரரல்ல, நம்மைப் பொறுத்த வரையில் சிலுவை தவறுதலாக அளிக்கப்பட்டு விட்டது என்போம்.

அனுதாபம் ஒரு தந்திரமானது. கிறிஸ்துவின் வழி போல தெரிந்தாலும் அது மாம்சீகம். இயேசு பேதுருவின் அனுதாபத்தை மறுத்து விட்டு அது மாம்சத்துக்குரியது, தேவனுக்குரியதல்ல என கூறி விட்டார். அவருக்குத் தமது சிங்காசனம் சிலுவை என்பதும் அவர் அதை விட்டுத் திரும்பக் கூடாது எனவும் அறிந்திருந்தார்.

நீங்கள் சிலுவைக்குச் செல்வதை சாத்தான் இயன்றமட்டும் தடுக்க எல்லாவற்றையும் செய்வான். சுயம் முழுவதுமாக மரித்து, பழைய மனுஷனை (மாம்சம்) சிலுவைக்கு ஒப்புக் கொடுக்கும் போது சாத்தான் ஆண்ட வரிடம் சொன்னது போல் உங்களை சிலுவையைவிட்டுக் கீழிறங்க சொல் வான். இயேசுவை அவ்விதமாகக் கீழிறங்க சொன்னார்களல்லவா? அல்லது "இது உமக்கு நேரிடக் கூடாதே" என்று பேதுரு மற்றும் அவன் சகோதரன் மூலம் சிலுவை பாடுகளை தடை பண்ணினது போல் நம்மையும் சாத்தான் வஞ்சிப் பான்.

பலியைக் பலிபீடத்தின் கொம்புகளில் கட்டுவது

நீங்கள் சிலுவைக்குச் செல்ல அனுமதித்து, முழு அர்ப்பணம் நித்திய காலத்துக்காகச் செய்யும் போது ஒரு திட தீர்மானத்துடன் கீழே இறங்கி வருவதற்குரிய சோதனையை எதிர்க்க வேண்டும். "பண்டிகைப் பலியைக் கொண்டு போய் பலிபீடத்தின் கொம்பு களில் கயிறுகளால் கட்டுங்கள்".*(சங்.118:27)* சிலுவையிலறையப்பட்ட வாழ்வில் அழுத்தம் குறைவதால், நமது கிறிஸ்தவம் ஆழமற்றிருக்கிறது. சுத்திகரிக்கப்பட்ட வாழ்வு கிறிஸ்துவின் மரணத்தோடு தொடர்புடையதாயிருக்க வேண்டும். நாம் கவலையீனமாக இருக்கும் போது சிலுவையிலிருந்து இறங்கி விடலாம்.

ஒருவர் சிலுவையிலிருந்து (பாகுகளுக்கு விலகி ஒடுவது) இறங்கி வருவது என்றால் என்ன?

சிலுவையிலிருந்து இறங்கி வருவது என்றால் என்ன? என்று கேட்டால் எனது பதில் நமது சுயத்தைப் வெறுக் காமல் பாதுகாக்க செய்வது சிலுவை யிலிருந்து இறங்கி வருவதுதான். ஆவிக்குரிய கொள்கைகள் அடங்கி யிருக்குமிடத்தில் ஒரு எளிய வழியை எடுத்துக் கொள்வது சிலுவையிலிருந்து இறங்குவதற்கு சமானம். நேர்மை யாகவும் சரியாகவும் சொன்னால் சாக்குப் போக்குச் சொல்ல எடுத்துக் கொள்ளும் எல்லா முயற்சிகளும், தன்னைச் சரியென்று சொல்ல, பாது காக்க, சுயத்தை பாதுகாக்க எடுத்துக் கொள்ளும் முயற்சிகளும் சிலுவை யிலிருந்து இறங்கி வருவதுதான்.

1. **சுய அனுதாபம்:–** இது சுயத்தைப் பாதுகாக்கும் ஒரு வழியாகும். உங்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட தவறுக்காக பதில் எதுவும் செய்ய முடியவில்லை என வருத்தப்படு கிறீர்கள். நீங்கள் சுய அனுதாபத்திற்கு இடம் கொடுத்தால் சிலுவையிலிருந்து இறங்கி வருவதுதான்.
2. **மனகசப்பு:–** இது சுயபாதுகாவல். உங்களுக்கு விரோதமாக யாரோ தவறு செய்தபடியால், பதில் செய்ய முடியாத நிலையில் அவர்கள் மேல் கசப்பு, எரிச்சல், கோபம் எற்படுகிறது. இது உங்களை சிலுவையிலிருந்து இறங்கி வர பண்ணுகிறது.
3. **சுய நீரூபணம்:–** இது ஒருவித சுய பாதுகாப்பு. தான் செய்வதுதான் சரி என கூறுவதால் எத்தனையோ துன்பங்கள் நேரிடுகின்றன. இப்பண்பு டைய ஒருவரால் சபைகளில் அழிவுகள் ஏற்படுகின்றன, அத்து மாக்கள் வழி விலகி போகிறார்கள் இது உங்களை சிலுவையிலிருந்து இறங்கி வர பண்ணுகிறது.
4. **பிறரை குற்றப்படுத்துவது:–** இதுவும் ஒருவகை சுயபாதுகாவல் தான். தவறை ஒத்துக்கொள்ளாமல், அதை மறுபடியும் மறுபடியும் மற்றவர்மேல் குற்றம் சாட்ட முயற்சிப்பது. ஒருவர் நம்மை தவறாக புரிந்து கொண்டால், நம்மை நியாயப்படுத்த தேவையற்ற முயற்சிகளை எடுப்பது. இதுவும் உங்களை சிலுவையிலிருந்து இறங்கி வர பண்ணுகிறது. இயேசுவைப் போல நம்மிடம் விசுவாசமில்லை. இயேசு செய்தது போல் செய்யுங்கள். நமது ஆத்துமாக்களை உத்தம சிருஷ்டி ராகிய தேவனிடம் ஒப்படைக்க வேண்டும்.
5. **தன்னை நியாயப்படுத்துதல்:–** இரக்க மற்ற விமரிசனம் ஒரு விதமான சுய பாதுகாவலாகவும், தன்னை நியாயப் படுத்துவதாகவுமிருக்கிறது. இது சிலுவையிலிருந்து இறங்கி வருவ தாகும். கட்சி (தனக்கு அதரவாக குழு சேர்ப்பது) ஆவி, ஆவிக்குரிய குழுவுக்கு வேராயிருந்து, பிறருடைய மதி நுட்பம், நேர்மை இவைகளின் மேல்

(6-ம் பக்கம் பார்க்க)

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

பார்வை வைத்து தங்களுடன் ஒத்துப் போகாதவர்கள் மேல் பிரதிவினை நிகழ்த்துவது ஒரு தந்திரமான சுய நியாயப்படுத்தலுக்கும் சுயத்தைப் பாதுகாப்பதற்கும் இணையாகும்.

மேற்கூறிய அனைத்தும் பொதுவாக எல்லா சபைகளிலும் காணப்படுகின்றன. அனேகர் இரட்சிக்கப்பட்டு, சுத்திகரிக்கப்பட்டு ஆவியினால் நிறைந்திருக்கிறோம் என்று சொன்னாலும் ஒரு சிலரே நாங்கள் சிலுவையிலறையப்பட்ட வாழ்வு வாழ்கிறோம் என்று சொல்ல முடியும்.

சிலுவை வெற்றியின் இரகசியம்

சாத்தானுக்கு மேலாக ஒரு வல்லமையின் இடம் மட்டுமே உண்டு அதுதான் கல்வாரி சிலுவை. அது கடந்த காலங்களில் மட்டுமல்ல இன்றும் காணக் கூடியது. சிலுவையின் மேலும் சிலுவையாலும் தான் கிறிஸ்து வெற்றி சிறந்தார். அங்கு தான் சாத்தான் சதா காலங்களுக்குமாக தோற்கடிக்கப் பட்டான். நாம் சிலுவையில் இருக்கும் போது மட்டுமே அவன் நம்மைத் தொட முடியாது. நம்முடைய இயற்கையின் எந்தப் பகுதி சிலுவையில் அறையுண்டு காணப்படுகிறதோ அதை சாத்தான் தொட மாட்டான்.

உங்கள் கடந்த காலத்தை சிந்தித்துப் பார்த்தால் சிலுவையிலிருந்து இறங்கிய சமயம் மட்டுமே நீங்கள் தோல்வியடைந்ததை உணரலாம். நீங்கள் இறங்கிவர தூண்டப்பட்ட போதும் தோல்வியடைந்தீர்கள். சாத்தான் நம்மைக் கீழே இறங்கி வரப்பண்ணினால் நீங்கள் தோற்கடிக்கப்பட்டு விட்டீர்கள். சாத்தான் இயேசுவை சிலுவையை விட்டு இறங்கப் பண்ணியிருந்தால் கிறிஸ்துவை மேற்கொண்டிருப்பான். நாம் சிலுவையில் இருக்கும் போது அவனுக்கு நம்மீது அதிகாரமில்லை. ஆனால் நாம் கீழே இறங்கி விட்டால் மறுபடியும் சிலுவை செல்லும் வரை தோல்வி தான்.

நாம் சிலுவையிலிருந்து இறங்கி எல்லாவற்றையும் நம் இஷ்டப்படி பயன்படுத்துகிறோம். நமது தீர்ப்பைப் பின்பற்றுகிறோம், சுய அனுதாபம், தன்னை நியாயப்படுத்துதல், கோபம், இன்னும் வேறு பலவிதமான சுய பாதுகாவலர்களைத் தேடிக் கொண்டு, தோல்வியடைகிறோம். இவை எல்லாவற்றையும் விட்டுவிட்டு இறுதியில் திரும்பவும் சிலுவைக்கு நேராகத் திரும்புகிறோம். நாம் தொடர் வெற்றி பெற சிலுவையிலேயே அறையப்பட்டிருக்க கற்றுக் கொள்ள வேண்டும்.

கிறிஸ்துவோடு எழுப்பப்பட்டோம்

Raised up with Christ

Andrew Murray (1828-1917)

கிறிஸ்து உயிரோடெழுந்ததற்கு ஒரு ஆழமான கருத்து உண்டு. அவர் மரித்த போது என்ன செய்தார்? அவர் முற்றிலும் உதவியற்ற அந்தகாரத்திற்குள் இறங்கிச் சென்றார். அவர் பாவமற்ற, தேவனால் அளிக்கப்பட்ட, அழகிய விலையேறப் பெற்ற ஜீவனை விட்டார். 'அவர் கேட்பாரானால் என் ஜீவனை என் பிதாவின் கரங்களில் கொடுப்பேன்' என்பது போல் தோன்றுகிறது. அவர் அப்படியே செய்தார். கல்லறையில் தேவன் தமது சித்தத்தை நிறைவேற்றற அவர் காத்திருந்தார். அவர் தேவனை கனம் பண்ணின படியால், தேவன் அவரை மிகுந்த மகிமைக்கும் வல்லமைக்கும் உயர்த்தினார். அவர் தமது ஜீவனை மரணத்தில் பிதாவுக்கு ஒப்புக்கொடுத்தபடியால் அவர் எதையும் இழக்கவில்லை. எனவே நாம் விருப்பத்தோடு மனமுவந்து ஜீவனைக் கொடுக்கிறவர்களுக்கு அவர் அப்படியே செய்வார். "ஆதலால் அவருடைய மரணத்தின் சாயலில் நாம் இணைக்கப்பட்டவர்களானால், அவர் உயிர்த்தெழுதலின் சாயலிலும் இணைக்கப்பட்டிருப்போம்". *(ரோம 6:5)*

நம்மேல் தேவனுடைய மகிமையும் ஜீவனும் வரவேண்டுமானால், அது சற்றும் உதவியற்ற அந்தக் கல்லறையில் தான் பிறக்கிறது. இயேசுவை உயிரோடெழுப்பிய வல்லமை நம்மிலும் தேவ கிருபையால் செயல்பட முடியும். ஒருவன் சரியான கிறிஸ்தவ வாழ்வு வாழ வேண்டுமானால் இயேசுவின் வல்லமையால் முழுமையான உயிர்த்தெழுதல் வாழ்வு வாழ வேண்டும். இயேசு இரு முறை பிறந்தார். முதலாவது பெத்லகேமில் பிறந்தார். அந்த பிறப்பு பெலவீன வாழ்க்கையைக் கொடுத்தது. இரண்டாவதாக அவர் கல்லறையிலிருந்து பிறந்தார். அவர் மரித்தோரிலிருந்து முதற்பலனாக வந்தார். *(கொலோ.1:18)* முதல் பிறப்பினாலே கிடைத்த ஜீவனை அவர் கொடுத்தபடியினாலே, தேவன் அவருக்கு இரண்டாம் பிறப்பின் ஜீவனைக் கொடுத்தார். அதோடு பரலோக மகிமையும் தேவ சிங்காசனமும் அவருக்கு அளிக்கப்பட்டன.

ஒருவன் உத்தம கிறிஸ்தவனாகவும், வெற்றியுள்ள ஊழியக்காரனாகவும் வளர்ச்சியும் முன்னேற்றமுமுடையவனாகவும் இருக்கலாம். ஆனால் இந்த நிறைவான ஆசீர்வாதங்களுக்குள் பிரவேசிக்காவிட்டால், அவனுக்கு இரண்டாவதும் ஆழமானதுமான தேவனுடைய இரட்சிக்கும் வல்லமையின் அனுபவம் வேண்டும். எகிப்திலிருந்து சிவந்த சமுத்திரத்தைக் கடந்தாலும் யோர்தானைக் கடந்து தான் கானான் செல்ல முடியும்.

கிறிஸ்துவின் மரணத்தால் நாம் ஞானஸ்நானப்படுத்தப்பட்டோம். இது நாம் இப்படிச் சொல்வது போலிருக்கிறது. எனக்கு ஆசீர்வாதமான வாழ்க்கை இருந்தது. பல ஆசீர்வாதமான அனுபவங்களையும் கடந்து வந்தேன். தேவன் பல நன்மைகளை என் வாழ்விலே செய்திருக்கிறார். ஆனால் ஏதோ தவறு இருப்பதை உணருகிறேன். இந்த வாழ்வில் இளைப்பாறுதலும் வெற்றியும் எனக்கு இல்லை. கிறிஸ்து சிங்காசனத்தில் இளைப்பாறுதலும் வெற்றியுமான வாழ்வைப் பெறுமுன் அவர் மரிக்கவும் எல்லாவற்றையும் விட்டு விடவும் வேண்டியதாயிருந்தது. நீங்களும் அவ்வாறு செய்தால் அவரது வெற்றியையும் மகிமையையும் பகிர்ந்து கொள்ளலாம். நாம் மரணத்தில் இயேசுவைப் பின்பற்றினால் அவரது உயிர்த்தெழுதல், வல்லமை, சந்தோஷம் எல்லாம் நமக்கும் சொந்தமாகும்.

கிறிஸ்து தம்மைத் தாழ்த்தின படியால் தேவன் அவரை உன்னதங்களிலே உயர்த்தினார். அந்த உயர்வின் அழகும் ஆசீர்வாதமும் எங்கிருந்து வந்தன? அவர் பிதாவோடு பூரண உறவு வைத்திருந்தார்.

வேதவசனம், உயிர்தெழுந்த வாழ்வில், சந்தோஷம், சமாதானம், பாவத்தின் மேல் வெற்றி, தேவனில் இளைப்பாறுதல் மட்டுமல்ல அவர் பரிசுத்த ஆவியால் நம்மை நிரப்புவார் என்று வாக்களிக்கிறது.

உயிர்த்தெழுந்த வாழ்வு, அவர் மேலுள்ள விசுவாசத்தை உடையது. அவர் நம்மோடு இருக்கிறவரும் சிங்காசனத்திலிருக்கிறவருமாயிருக்கிறார். நாமும் அவருடைய உறவில் பங்காளிகளாகிறோம். அவர் தேவ சமுகத்தில் வாசம் பண்ணி, தூய ஆவியால் நம்மை நிரப்பி, நம் உள்ளும் வெளியேயும் நாம் அறியாத விதமாய் கிரியை செய்கிறார்.

இயேசு தெய்வீக வாழ்வைப் பெற முற்றிலும் பிதாவின் மேல் வாழ்நாளெல்லாம் சாவு வரை சார்ந்திருந்தார். இயேசு அந்த வாழ்வை ஆவியின் முழு மகிமையோடு பெற்று அதை தேவனுக்குக் கீழ்ப்படிந்து, அர்ப்பணம் செய்து ஊற்றி விட்டார். கல்லறையிலும் தேவன் தமது பலத்த சத்துவத்தை விளங்கச் செய்தார். அதே கிறிஸ்து அவரது ஜீவனை நம்மிலும் வாழச் செய்வார். தேவனுக்கு முன் பாகவே நம்மைத் தாழ்த்துவோமாக.

கிறிஸ்துவின் சபை தேவனுக்கு முன்பாகத் தன்னை மிகவும் தாழ்த்தி, அவர் புதியதும், ஆச்சரியமானதும், இயற்கைக்கு மேலானதுமான கிரியையால் தூக்கி விடாவிட்டால் உலகத்தை ஜெயிப்பதில் அது பெலவீனமாகவே யிருக்கும். சபைக்குள்ளே வெதுவெதுப்பான நிலை, லௌகீகம், கீழ்ப்படியாமை மற்றும் பல பாவங்கள் மலிந்து கிடக்கின்றன. நாம் எப்படிப் போராடி இந்தக் கடினங்களை எதிர்கொள்ள முடியும்? இதற்கு பதில், உயிர்த்தெழுந்தவரும், கிரீடம் தரித்தவரும், சர்வவல்லவருமானவர் வந்து ஒவ்வொருவரிலும் வாசம் செய்ய வேண்டும். இதற்கு நாம் அவரோடு மரிக்க வேண்டும். தேவன் தாமே, அவர் நம்மில் செயல்பட்டு, கிறிஸ்து நம்மில் அவரது வாழ்வை வாழச் செய்ய நாம் காத்திருக்க நமக்குப் போதிப்பாராக.

உயிர்த்தெழுந்த இரட்சகரின் வல்லமை

The power of the risen saviour

Charles H. Spurgeon (1834-1892)

உங்கள் இருதயங்கள் கிறிஸ்து சிலுவையிலிருக்கும் காட்சியை அதிக மாக சிந்திக்கட்டும். ஆனால் மகிமைப் படுத்தப்பட்ட அவரையும் நினைவு கூருங்கள். **அவர் இங்கே இல்லை,** அவர் உயிர்த்தெழுந்தார். **அவர் இங்கே இல்லை,** அவர் பரத்துக்கேறிவிட்டார். **அவர் இங்கே இல்லை.** ஏனெனில் தேவனுடைய வலதுபாரிசத்தில் சிங்காசனத்தில் உட்கார்ந்து கொண்டு நமக்காகப் பரிந்து பேசிக் கொண்டிருக்கிறார்.

இயேசுவுக்கு எல்லா வல்லமையும் உண்டு

"...வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப் பட்டிருக்கிறது". (மத்.28:18)

'**சகல அதிகாரமும்**' அவரது மரணத் தினால் பிதா அவருக்குக் கொடுத்தார். சகல அதிகாரமும் என்றால் என்ன? அது மேலானது. நாம் எட்ட முடியாதது. இந்த அறிவு அதிக ஆச்சரியமானது. அவரது சர்வ வல்லமை, சிருஷ்டிப்பு, சிருஷ்டித்த யாவையும் பராமரிப்பது, உருவாக்குவதும் அழிப்பதும், திறப்பதும் அடைப்பதும், எறிந்து விடுவதும் நிலைநிறுத்துவதும், கொல்லுவதும் உயிர் கொடுப்பதும், மன்னிப்பதும் குற்றம் சாட்டுவதும், கொடுப்பதும் எடுத்துக் கொள்வதும், ஆணையிடுவதும் நிறை வேற்றுவதும், எல்லாவற்றையும் வார்த் தையால் நிறைவேற்றுகிறார்."**... சரீரமான சபைக்கு அவரை எல்லாவற்றிற்கும் மேலான தலையாகத் தந்தருளினார்**". (எபே. 1:23) இவை யாவும் நம் கர்த்தராகிய இயேசுவுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

தூய ஆவியானவரின் வல்லமை

தூய ஆவியானவர் பாவியான மனிதர்களுக்கு பாவ உணர்வுகளை ஏற்படுத்தி இரட்சகரிடம் வழி நடத்தி, புதிய இருதயங்களையும், சரியான ஆவிகளையும் தந்து அவர்களை சபையில் நாட்டி, வளர்ந்து கனிதரச் செய்கிறார். ஆரோனுடைய தலையில் ஊற்றப் பட்ட அபிஷேக தைலம் அவன் தாடி வழியாக வடிந்து அவனது அங்கிகளின் மேல் வடிகிறது போல அவர் மேல் கொடுக்கப்பட்ட ஆவியானவர் அள வில்லாமல் அவரிலிருந்து நமக்கும் பாய்ந்து வருவார்.

பூமியின் சகல அதிகாரமும்

எல்லா அதிகாரமும் கிறிஸ்து வின் கரத்தில் இருக்கிறது. எனவே அவர் தமது பணியாட்களை தமது பரிசுத்த சத்துவத்தால் இடைகட்டி, அவர்கள் தங்கள் அழைப்பில் போதுமான பெலன டையச் செய்வார். அவர்களுக்கு நியமிக்கப்பட்ட நிலையில் அவர்களை வைத்து அவர் வரும் வரை வல்லமை யால் இடைகட்டி பயனுள்ளவர்களாக் குவார். என் சகோதரனே, தேவன் உங்களையும் மிகவும் செழிப்புள்ளவர் களாக அவர் வைத்திருக்குமிடத்தில் ஆசீர்வாதமாக வைப்பார். என் சகோதரியே, உங்கள் முழுங்கால் மூலம் கொண்டு வரப்படும் குழந்தைகளை அவர் ஆசீர்வதிப்பார். நீங்கள் பெல வீனர் என்று அறிவீர்கள். ஏன் நீங்கள் அவரில் பெலனடையக் கூடாது. சத்துவம் நிறைந்த அவரை நோக்கிப் பார்த்தால் அவர் உன்னதத்தின் பெலனால் தரிப்பிப்பார். கிதியோனிடம் சொன்னது போல "**உனக்கு இருக்கிற இந்த பெலத்தோடே போ**" (நியா.6:14) என்று சொல்லு வார்.

நமது நாட்களில் சபைக்கான வல்லமை

கிருபையின் மேல் கிருபையின் நிறைவை கர்த்தரிடமிருந்து பெற்றுக் கொள்ளுங்கள். அவர் விரும்பினால் இந்த வல்லமையால் சபையை வல்ல மையாக எழுப்ப முடியும். சபை தூங்கு கிறதா? அவரது சத்தம் அதை எழுப்பி விடும். ஜெபக்குறைவுடனிருக்கிறதா? அவரது கிருபை அதைத் தூண்டி எழுப்ப முடியும். அது அவிசுவாசத்தில் பெருகி விட்டதா? அதன் ஆதி விசுவாசத்தை அவர் திரும்பக் கொண்டு வர முடியும். போராட்டத்தில் பின் வாங்கி சந்தேகம் நிறைந்து காணப் படுகிறதா? அவளது உறுதியற்ற நிலையை மாற்றி திடப்படுத்தி, அவள் பிள்ளைகள் விசுவாச வீரர்களாக வளரச் செய்வார்.

நாம் விசுவாசித்தால் தேவனு டைய மகிமையை காண முடியும். சபைக்காக நமது நம்பிக்கையை இழக்க வேண்டாம். உங்கள் பாரத்தை ஜெப மாக மாற்றுங்கள். ஆனால் அதிக நம்பிக் கையுடனிருங்கள். சபையின் மீட்பர் சத்துவமுள்ளவர். தமது சத்துவத்தை தூண்டி எழுப்புவார். "சேனைகளின் கர்த்தர் நம்மோடிருக்கிறார். யாக் கோபின் தேவன் நமக்கு உயர்ந்த அடைக்கலமானவர்". (சங்.46:7) உலகம் காணாத ஒருவர் நம் மத்தியில் உண்டு. அவரது பாதரட்சைகளின் வாரையும் அவிழ்க்கும் தகுதி நமக்கு இல்லை. அவர் மறுபடியும் நம்மை பரிசுத்த ஆவி யாலும் அக்கினியாலும் அபிஷேகம் பண்ணுவார். எல்லா அதிகாரமும் அவருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

சிலுவையின் கருத்து

The meaning of the Cross

F.B. Meyer (1847-1929)

"**கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக் கடவது**". (பிலி.2:5)

விசுவாசம் என்பது ஒரு சத்தியத் தின் கூற்றின் புத்தி பூர்வமான அனுபவ மல்ல. தேவனுடைய சத்தியம் நிஜ மானது. நமது தனிப்பட்ட நம்பிக்கை அவர் மேலிருக்க வேண்டும். இயேசு கிறிஸ்து நமக்காக மரித்தார் என்பதை விசுவாசித்ததாலே மட்டும் நாம் இரட்சிக்கப்படவில்லை, நாம் அவரை நம்ப வேண்டும். நமக்கும் கிறிஸ்துவுக்கு மிடையிலுள்ள தனிப்பட்ட தொடர்பு அவரது ஜீவன் நமது இயற்கைக்குள் பாய்ந்து நம்மை நன்றாகவும் ஆரோக் கியமாகவும் வைப்பதோடு பத்திர மாகவும் பாதுகாவலுடனும் வைக்கிறது.

சிலுவை ஆண்டவர் முற்றிலு மாக தம்மைத் தமது பிதாவின் சித்தப்படி தந்த இடம் என்று நமக்கு பொருள்படவில்லையா? அவர் தேவன் தம்மையே ஊற்றிக் கொடுக்கும் ஒரு வாய்க்காலாக ஒப்புக்கொடுத்தார். "**அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம் அதாவது சிலுவையின் மரணபரியந்தம் தம்மைத் தாழ்த்தினார்**". (பிலி.2:8) அவர் கீழே கீழே இறங்கி, ஏணிப் படியின் ஒவ்வொரு படியிலும் இறங்கி பாதாளம் வரை இறங்கினார். தேவ சித்தத்தை நிறை வேற்ற அவர் எல்லாவற்றையும் துறந் தார். ஆனால் அந்த மிகத் தாழ்ந்த படி யிலிருந்து தேவன் அவரை நித்திய சிங்காசனத்தில் உட்காரும்படி எழுப் பினார்.

நம் ஒவ்வொருவரிலும் உறுதி யான ஒரு சுயசித்தம் இருக்கிறது. நான் நல்லவனாக நடக்க தீர்மானித்தேன். எனது கெட்ட குணங்களை விட்டு விடுகிறேன் அப்படிச் செய்வேன் என்று சொல்லுகிறீர்கள். ஆனால் அப்படி தொடருவதில்லை. நாம் நம்மைக் கண்டு கொள்ளவும், நமது சக்தி, நமது சுய நன்மை, சுய தீமை ஆகியவற்றை கிறிஸ்துவின் சிலுவையண்டை கொண்டு வந்து முடிவு கட்டவும் செய்தால் மட்டுமே நித்திய வாழ்வில் பிரவேசிக் கவும் வாழவும் முடியும்.

இவ்வேளையில் உங்களிடம் நான் சிலுவையினடியில் நின்று அங்கு தனது சொந்த சித்தத்தையே அர்ப் பணித்த இயேசுவை நோக்கிப் பார்க்க அழைக்கிறேன். அதோடு கூட உங்கள் சுய வாழ்வு அங்கே ஆணியடிக்கப் பட்டிருப்பதையும் நீங்கள் பார்க்க விரும்புகிறேன். பின்பு தேவனிடம் திரும்பி, அவரை ஆராதித்து நீங்கள் பெலவீனராகவும் உதவியற்றவர்களாக வும் இருக்கிறோம் என்று சொல்ல ஆயத்தமாகுங்கள். தேவன் தமது ஜீவனை, அவரது பலத்த சத்துவத்தை அதாவது கிறிஸ்துவை உயிரோடெழுப் பிய அதே வல்லமையை உங்களில் செலுத்தட்டும். **நாம் பெலவீனராயிருக்கும் போதுதான் உண்மையாகவே கிறிஸ்துவில் பெலனுள் ளவர்களாயிருக்கிறோம்.** இந்த அனுபவத்தைப் பெற நாம் நம்மை சிலுவையின் வல்லமைக்கு அர்ப்பணிக்க வேண்டும். அதாவது நாம் கிறிஸ்துவோடு சிலுவையிலறையப் படுவதை உணர வேண்டும். அப்போது சாத்தான் மேலுள்ள அவரது நித்திய வெற்றியில் பங்கு கொள்ள முடியும்.

"தேவனே நீர் உம்மை எங்க ளுக்கு உமது குமாரனாகிய இயேசு கிறிஸ்துவில் வெளிப்படுத்தினீர். அவரை

(8-ம் பக்கம் பார்க்க)

கிறிஸ்துவே நமது ஜீவன்

Christ our life

F.J. Huegal

கிறிஸ்தவனும் இரட்சகரும் ஒன்றாயிருக்கிறார்கள். "**நானே திராட்சச் செடி, நீங்கள் கொடிகள், ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான்; என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக் கூடாது.**" (யோவா.15:5) அதிக உணர்வோடு இதனை நாம் எடுத்துக் கொள்ள வேண்டும்.

கல்வாரியின் ஒளியில், வெறுமையான கல்லறை பரமேறுதல், பெந்தெகொஸ்து இவற்றை நூற்றாண்டு காலங்களாக கவனிக்கிற நாம், ஒரு நிறைவும் வெற்றியுமான வாழ்வைக் கிறிஸ்துவில் பெற்றுக் கொள்ள அப்போஸ்தலனாகிய பவுல் வலியுறுத்துகிறார். ஆண்டவராகிய கிறிஸ்துவின் ஆவியிலும், மரணத்திலும், உயிர்த்தெழுதலிலும் பங்குள்ளவர்களாயிருக்க அழைக்கிறார். அவர் விசுவாசி ஆண்டவரோடு உன்னதங்களில் வீற்றருப்பதைக் கண்டார். "தேவனோ இரக்கத்தில் ஐசுவரியமுள்ளவராய் நம்மில் அன்பு கூர்ந்த தம்முடைய மிகுந்த அன்பினாலே, அக்கிரமங்களில் மரித்தவர்களாயிருந்த நம்மைக் கிறிஸ்துவுடனேகூட உயிர்ப்பித்தார். கிருபையினாலே இரட்சிக்கப்பட்டீர்கள்... கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மை அவரோடேகூட எழுப்பி, உன்னதங்களில் அவரோடேகூட உட்காரவும் செய்தார்". (எபேசி.2:4-6)

விசுவாசத்தால் பயன்படுத்தப்பட வேண்டும்

வெற்றி என்பது கிறிஸ்தவனின் உரிமை. ஆயினும் அவன் நிபந்தனைகளையும் புரிந்து கொள்ள வேண்டும். அவன் கிறிஸ்துவோடு சிங்காசனத்தில் வீற்றிருக்கிறவனாகத் தன்னைப் பார்க்க வேண்டும். தேவனுடைய பரிசுத்த வசனத்தின்படி தன்னை கிறிஸ்துவோடு சிலுவையிலறையப்பட்டவனாகவும், மரித்து அடக்கம் பண்ணப்பட்டவனாகவும், உயிரோடெழுப்பப்பட்டு வானங்களில் ஆண்டவரும் இரட்சகருமாகிய கிறிஸ்துவோடு உட்கார்ந்திருப்பதையும் பார்க்க வேண்டும். இவையல்லாமல் அவன் தனது எல்லா முயற்சிகளும் ஜெபங்களும் பயனளிக்காமல் தோல்வியடைவான். அவனை நேசித்த தேவனால் மட்டும் அவன் வெற்றியடைவான்.

தேவன் உண்மையுள்ளவர். இது சத்தியம். ஒரு விசுவாசி என்ற நிலையில் எனது ஜீவன். கிறிஸ்துவில் தேவனுக்குள் மறைந்திருக்கிறது. (கொலோ.3:3) 2 கொரி.5:14-ன்படி "**எல்லாருக்காகவும் ஒருவரே மரித்திருக்க எல்லாரும் மரித்தார்கள்**". கிறிஸ்தவர்கள் உயிரோடெழுப்பப்பட்டு, தங்கள் பிரதிநிதிகளின் தலைவரோடு உன்னதங்களில் உட்காரச் செய்தார். (எபேசி. 2:4-6)

முக்கியமாகக் கிறிஸ்தவர்கள் இதைக் குறித்து இது வெறும் குறியீடு, இதன் கருத்தைப் புரிந்து கொள்வது இயலாதது என்று கவலைப்படுகிறார்கள். அவர்கள் உழைத்து வியாகுலப்பட்டு, மனித முயற்சி செய்தும் தேவ கிருபை செயல்படாததால் அது துக்கத்திலேயே முடிவடைகிறது.

இதில் குழப்பம் என்னவென்றால், தவறான அடிப்படையில் அவர்கள் செயல்படுகிறார்கள். இயேசுவினைப் போல வாழ அவர்கள் தங்கள் சொந்த முயற்சியால் முடியும் என்பதை தேவன் எதிர்பார்க்கவில்லை. அவர்கள் தங்களால் இது கூடாது என்பதை உணர வேண்டும். (ரோமர் 7 படிக்க) பவுல் தன்னால் இயலாது என்று முடிவு கட்டுகிறார். மக்கள் கிறிஸ்துவை தங்கள் ஜீவனாக பெற்றுக் கொள்ள பிறவற்றை அகற்றி விட எதிர்பார்க்கிறார். அவர்கள் கிறிஸ்துவோடு ஒன்றிணைந்து வாழும் நிலையை உணரும்படி எதிர்பார்க்கிறார். ஏனெனில் அவர் அவர்களை அனைத்து ஆவிக்குரிய ஆசீர்வாதங்களையும் உன்னதங்களில் கிறிஸ்துவில் பெற்று வாழ ஆசீர்வதித்தார். (எபே.1:3)

✦ ✦ ✦ ✦

கொழுந்து விட்டு எரியும் இதயங்கள்

Burning hearts

"**....வழியிலே அவர் நம்முடனே பேசி வேதவாக்கியங்களை நமக்கு விளங்கக் காட்டின பொழுது நம்முடைய இருதயம் நமக்குள்ளே கொழுந்து விட்டு எரியவில்லையா?**" லூக். 24:32

கிறிஸ்தவ சேவையில் கொழுந்து விட்டு இருதயம் எரிவது நமக்கு உயிரிய வெற்றி. கொழுந்து விட்டு எரியும் இதயங்கள் தங்களை பேச்சிலும் செயலிலும் வெளிப்படுத்தக் கூடும். இந்த நாட்களுக்கு அத்தகைய இதயங்கள் மிகத் தேவை. இந்த இதயங்கள் அன்பினால் கொழுந்து விட்டு எரிந்து கிறிஸ்துவையும் ஆத்துமாக்களையும் நேசிக்க வேண்டும்.

ஏன் கிறிஸ்தவர்கள் வல்லமையற்றிருக்கிறார்கள்? பெந்தெகொஸ்தே நாளோடு தாரதம்யப்படுத்தும் போது இரட்சிக்கப்படுகிறவர்களின் எண்ணிக்கை மிகக் குறைவாயிருக்கிறதே. பேர்க்கிறிஸ்தவர்கள் மத்தியில் இருதயங்கள் குளிர்ந்து கொண்டே போகிறதே. கிறிஸ்துவின் அன்பு இருதயங்களிலுள்ள கசடுகளை எரித்து, விசுவாசிகளின் நிர்விசாரம் என்ற மரித்த நிலையாவற்றையும் சுட்டெரிக்கிறது.

விசுவாசியின் வார்த்தைகள், செயல்கள், குரல், பார்வைகள் இவற்றின் மூலம் இந்த அன்பு வெளிப்படும். பரிசுத்தமாக்கப்பட்ட இருதயங்கள் வல்லமையான வாழ்வை ஏற்படுத்தும். அதுவே இன்றைய தேவை. கிறிஸ்துவுக்காக நாம் பணி செய்யும் போது நமக்கு **கொழுந்து விட்டு எரியும் இதயம்** தேவை. அல்லாவிட்டால் நமது சேவை எந்திரமயமாகிவிடும். எனவே கிறிஸ்துவின் அன்பாலும் வல்லமையாலும் கொழுந்து விட்டு எரிவோம்.

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

நாங்கள் நேசிக்கிறோம். அவர் எங்களுக்காக சிலுவையை சகித்து, வெறுக்கப்பட்டு, எங்களுக்காக வெட்கத்தையும் சகித்தார். நாங்களும் அவருடைய சிலுவைப் பாதையை பின்பற்றட்டுமா? அவரது நிந்தை, துக்கம், மரணபரியந்தம் கீழ்ப்படிதல் போன்றவற்றை சகித்து அவருடைய பாடுகளில் பங்கு பெறவா? இவ்வாறு அவரோடு இங்கேயும் அவரோடு ஆட்சி செய்யவும் பூரணமாக இறுதியில் இன்றும் அவரோடு ஆளவும் கிருபை செய்யும் ஆமென்".

சபைக்காக நமது நம்பிக்கையை இழக்க வேண்டாம். உங்கள் பாரத்தை ஜெபமாக மாற்றுங்கள். ஆனால் அதிக நம்பிக்கையுடனிருங்கள். சபையின் மீட்பர் சத்துவமுள்ளவர்.

Contact:

VARUKAYIN THOOTHAN
7, Newport Street, W.C.C. Road,
Nagercoil - 629 001.
Kanyakumari District,
SOUTH INDIA.

Mobile: +91 095432 21008
Whatsapp: +91 094897 40295
email: varukayinthoothan@hotmail.com

சிந்தனைக்கு

நமது பாவங்களுக்காக சிலுவையில் ஆணிகளால் கடாவப்பட்டது போன்ற மிகப் பெரிய தியாகம் எங்குமே காண முடியாது.

கிரயம் எவ்வளவு அதிகம் ஆனாலும் அதை செலுத்தி தமது பிதாவின் சித்தத்தை முற்றிலும் நிறைவேற்றினார்.

சிலுவைக்குச் சென்று தமது ஜீவனைக் கொடுத்து நாம் நமது பாவங்களிலிருந்து மன்னிப்பை அடையவும் நித்திய ஜீவனைப் பெற்றுக் கொள்ளவும் சித்தம் கொண்ட அன்பான நமது இரட்சகர் இயேசுவுக்கு எப்படி நமது முழுமையான மதிப்பை உணர்ந்து அதனை வெளிப்படுத்த முடியும்?

அவரது கெத்செமெனே ஜெபம் மரிப்பதற்கு முந்தின நாள் ஏறெடுக்கப்பட்டதிலிருந்து சிலுவையின் பாடுகளும் வெட்கமும் அவருக்கு எவ்வளவு வேதனையளித்தன என அறியலாம்.

சாத்தானுக்கு மேலாக ஒரு வல்லமையின் இடம் மட்டுமே உண்டு அதுதான் கல்வாரி சிலுவை.

Printed and Published by Wesley Devadason and Printed at Varukayin Thoothan Offset Press and Published at 3/8, Newport Street, Nagercoil - 629 001.
Editor : Wesley Devadason